தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தைத் திருவிழாவில் கார்னல் மாணவ மாணவியர் கொண்டாட்டம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமும் ஐஸ்வர்யா ஆர்கானிக்ஸ் நிறுவனமும் இணைந்து பொங்கல் விழாவை காளியாபுரத்தில் உள்ள விவசாய பண்ணையில் கார்னல் பல்கலைக் கழகம், அசாம் பல்கலைக்கழகம் மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் சார்ந்த மாணவ மாணவிகள் அழைக்கப்பட்டு பொங்கல் விழா நடத்தப்பட்டது. விழாவில் பண்ணையைச் சார்ந்த மகளிர்கள் பொங்கல் வைப்பது பற்றியும் பல்கலைக்கழக மாணவிகளுக்கு விளக்கியதோடு பொங்கல் வைக்கக் கற்று கொடுத்தனர். மாணவியர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் பொங்கல் வைக்கும் நுட்பத்தை அறிந்து கொண்டார்கள்.

மேலும், கிராமிய கலை நிகழ்ச்சியான கும்மியாட்டம் நடத்தப்பட்டு அதில் அனைத்து மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். கவனத்தோடு ஒரு இலக்கை அடையும் விளையாட்டான உறியடித்தல் நடத்தப்பட்டு அதிலும் மாணவர்கள் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டனர், விழாவின் ஒரு பகுதியாக கிராமத்து வாலிபர் ஒருவர் சிலம்பாட்டம் ஆடி அனைவரையும் பரவசப்படுத்தினார். விழா பெரிதும் வெற்றிகரமாக நடைபெற விழா ஏற்பாடுகளை முனைவர். சந்திரபாபு, இயக்குனர் பயிர் மூலக்கூறு உயிரியல் மையம், முனைவர். க. அ. பொன்னுசாமி, இயக்குநர் விரிவாக்க கல்வி இயக்கம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் வேளாண் செம்மல் விருது பெற்ற மயில்சாமி கவுண்டர், பேராசிரியர் ஸ்ரீதர் பயிர் நோயியல் துறை, திரு.பாலாஜி உதவிப் பேராசிரியர் வேளாண் மற்றும் கிராமிய

மேலாண்மைத்துறை, லயன்ஸ் கிளப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர். இவ்விழா தமிழ் கலாசாரத்தையும் வீர விளையாட்டுகளையும் அயல்நாட்டு மாணவ மாணவிகள் ரசிக்கும் வகையில் கொண்டாடப்பட்டது.

மக்கள் தொடர்பு அலுவலர்